"TAMIL POEMS ON SIDDHAR, BY MR A PANDIAN".

அரசாட்சி செய்திடவே அவதரித்த ஒருமகனே
அருளாட்சி செய்திடவே அமர்ந்துள்ள பெருமகனே
செம்பித் திருநாட்டின் செல்வமிகு இளவரசே
சிங்கை வளநாட்டின் சித்தர்மணிப் பேரரசே!

என்னவனை மன்னவனை இன்பநிலை சொன்னவனை
என்றென்றும் இருக்கின்ற ஏகாந்த முன்னவனை
தென்னவனை தீந்தமிழின் தெய்வீகப் பாவலனை
சிங்கைநகர் ஜோதியினைத் தொழுதின்று வணங்கிடுவோம்!

(வாருங்கள்)

அரசன் மகன் என்பதனால் அரசமரம் தலவிருட்சம்
அருள்ஞானி என்பதனால் அடியார்கள் திருக்கூட்டம்
கலையழகன் என்பதனால் கலையரங்கம் கோபுரங்கள்
சிலையழகன் என்பதனால் தேன்மணக்கும் பூமாலை.

உள்ளம் மலருதையா உன்னுதடு நெளியுதையா
பள்ளம் கன்னத்தில் பணக்குழிபோல் தெரியுதையா
உளிசெய்த சிலையினிலே உயிர்கொண்டு சிரிக்கின்றாய்
ஒளிசிந்தும் விழிகண்டு ஊரெல்லாம் பேசுதையா

புண்ணியமும் பாவமுமே புரிந்திருந்தும் செய்தபிழை
நண்ணிய வினைகளாலே நலிந்துழன்று தேம்பலானோம்
திண்ணியனே பெருமானே துளித்துளியாய் வழியுமெங்கள்
கண்ணீரில் சிறிதெடுத்துப் பன்னீராய்ப் பொழிகின்றோம்.

மலராகப் பிறந்தவெல்லாம் மகிமைதான் பெறுவதுண்டோ
பலநூறு பூவிலொன்று போய்இறைவன் பூசைக்காகும்
மனிதராய்ப் பிறந்தோருள்ளும் மகானாக உயர்ந்திடும்நல்
புனிதமிகு தத்துவத்தின் பூச்சொரிதல் அபிசேகம்!

அரண்மனைபோல் அமைந்திருக்கும் சித்தர்பீடம்! - இது
அகிலத்து ஆன்மீக முத்தர் பீடம்!
நறுமணமே கமழுகின்ற ஞானபீடம்! - இது
நற்றவத்தோர் நாடிவரும் மோனபீடம்!

(வாருங்கள்)

தன்னை உணர்வதற்குத் தவத்தினிலே அமர்ந்தவுடன்
என்னுள்ளே நிறைந்திருந்து இயக்குகின்ற என்குருவே!
கன்னல் மொழியோனே! கருணைமிகு சித்தரய்யா!
அன்னத்தால் அபிசேகம் அடிபணிந்து படைக்கின்றோம்.!

இப்போது தெரிகிறது என்ஐயன் அழகுமுகம்
எத்தனையோ சூரியன்கள் இங்கொன்றாய்த் திகழ்கிறதே
எப்போதும் எவரெங்கும் இன்றளவும் கண்டிராத
இன்பநிலைத் திருக்காட்சி இன்றெனக்கு வாய்த்ததம்மா

(அலங்கார)

மயானத்தின் பாதையிலே மகிமைமிகு ஆற்றலுடன்
தியானத்தின் சுவையுணர்த்த சூட்சுமமாய் அமர்ந்துள்ளாய்
அந்தவழி மரணவழி இந்தவழி இருக்கும் வழி
எந்தவழி உந்தன்வழி? என்கின்றாய் ஞானஒளி!

(பூமிக்குள்)

பொன்னுக்கும் பொருளுக்கும் மகிழவைத்தாய்—பெரும்
புகழுக்கும் பெருமைக்கும் நெகிழவைத்தாய்
என்னுக்குள் நீவந்து நிறைந்துகொண்டால் – இந்த
ஏழேழு உலகமும் எனக்கெதற்கு? நீ...

சித்தர்கள் போற்றிடும்

பத்தி முறையறியேன் பண்பாளர் நட்பறியேன்
முத்தி நெறியறியேன் மனமுருகும் மாண்பறியேன்
கத்திக் கதறுகின்றேன் காதடைக்கும் உந்தனுக்கு
உத்தமனே உணர்த்திடுவாய் "உபதேசம்" எந்தனுக்கு

(பூமிக்குள்)